

ஓம் ஈஸ்வராய நமஹ:

# ஞானாலயம்

ஒளியை நோக்கிய உன்னதப் பயணம்

## கலியுகத்தில், ஞானம் அடைவதற்கு என்றே உருவான ஒரு திருக்கோவில்

### திருவருட்பிரகாச வள்ளலாரின் அருளுரை (05-02-2020 அதிகாலை 4.30 மணிக்கு உரைத்தது)

அருட்பெரும் ஜோதி அருட்பெரும் ஜோதி
தனிப்பெரும் கருணை அருட்பெரும் ஜோதி

பரஞ்ஜோதி பரஞ்ஜோதி
பரவுருவான பரஞ்ஜோதி
அகம் உருக்கும் பரஞ்ஜோதி
ஆகமம் உணர்த்திடும் பரஞ்ஜோதி
இதழ்களை மலர்த்திடும் பரஞ்ஜோதி
ஈவினை ஈந்திடும் பரஞ்ஜோதி
சத்தியம் பகன்றிடும் பரஞ்ஜோதி
சன்மார்க்கம் புகட்டிடும் பரஞ்ஜோதி
நித்திய ஜீவனாம் பரஞ்ஜோதி
தீரும் நெருப்பும் பரஞ்ஜோதி
பற்றினை நீக்கிடும் பரஞ்ஜோதி
பாரினை வலம்வரும் பரஞ்ஜோதி
சுயத்தினை ஏற்றிடும் பரஞ்ஜோதி
சுயம்புவாய் நிலைத்திடும் பரஞ்ஜோதி
முக்தியை நல்கிடும் பரஞ்ஜோதி
மூப்பினை நீக்கிடும் பரஞ்ஜோதி
உயிரிலே கலந்திடும் பரஞ்ஜோதி

ஊனிலே உறைந்திடும் பரஞ்ஜோதி
அகரமும் உகரமும் பரஞ்ஜோதி
ஆதியும் அந்தமும் பரஞ்ஜோதி
சொல்லும் செயலும் பரஞ்ஜோதி
சோர்வினை வென்றிடும் பரஞ்ஜோதி
வட்டமாய் சுழல்வதும் பரஞ்ஜோதி
வாலையாய் வாழ்வதும் பரஞ்ஜோதி
குமரியாய் குளிர்வதும் பரஞ்ஜோதி
குமரனாய் ஒளிர்வதும் பரஞ்ஜோதி
வாசகம் புரிவதும் பரஞ்ஜோதி
வாசியாய் உட்புகுவதும் பரஞ்ஜோதி
சிவமாய் வடிவுறும் பரஞ்ஜோதி
சீவனாய் வாழ்ந்திடும் பரஞ்ஜோதி
ஏற்றங்கள் அளிப்பதும் பரஞ்ஜோதி
எந்தையாய் ஆள்வதும் பரஞ்ஜோதி
அம்மையும் அப்பனும் பரஞ்ஜோதி
அந்தியும் சந்தியும் பரஞ்ஜோதி

ஞானத்தின் திருவுருவம் பரஞ்ஜோதி
ஞாலத்தின் தீர்க்கமும் பரஞ்ஜோதி
யுகயுகமாய் நீடிக்கும் பரஞ்ஜோதி
யுத்தம்தனை நிறைவுறுத்தும் பரஞ்ஜோதி
சக்தியின் அம்சமாம் பரஞ்ஜோதி
சீலத்தின் அகவுருவம் பரஞ்ஜோதி
இகபர சுகம் யாவும் பரஞ்ஜோதி
சத்திய சன்மார்க்கம் பரஞ்ஜோதி
ஜோதியுள் ஜோதியாம் பரஞ்ஜோதி
பரமனுள் ஜீவனாம் பரஞ்ஜோதி
ஈசனாம் எனது அப்பனாம் பரஞ்ஜோதி
ஈகையின் உச்சமாம் பரஞ்ஜோதி
காத்தலும் அழித்தலும் பரஞ்ஜோதி
காப்பிட்டு அணைப்பதும் பரஞ்ஜோதி
வாழ்கவே வாழ்கவே பரஞ்ஜோதி
வானவரும் வாழ்த்திடும் பரஞ்ஜோதி.

பரஞ்ஜோதியாம், அப்பனாம்,ஈசனாம், பரமனாம், பகலவனாம், நித்திய ஜோதியாம், ஆற்றலின் உச்சமாம், அருள்வாய் ஒளிர்பவனாம் ஆன்மாவின் அதிபதியாம், அருட்பெரும் ஜோதியாம் எமது அப்பனை ஈசனை உருகியே கலந்திடுவோம் சத்தியம் உரைத்திடுவோம். நித்தியமும் எமதருளால் ஜீவன் பல வாழ்ந்திருக்க, பக்தியும் பரவசமும் ஊற்றெனவே பெருகி நிற்க, பற்றியே கரைசேர பாங்குடனே பதமுறவே, காற்றினிலே வீறு கொள்வோம். கலப்புற்றே உரு கொள்வோம். ஒளியான பதம் சேர்ந்திட ஒளியெனவே திருந்திடுவோம். ஓம்காரம் இசைத்திடவே ஆதிசக்தி அருளிடுவாள். ஒன்றெனவே திரிந்திடவே ஒளி ரூபம் கண்டிடலாம்.

இராமலிங்க சுவாமி என்பர், வள்ளலார் என்றுரைப்பர் நாமத்தைத் துறப்பவர்கே பல நாமம் வழங்கப்படும். ஈசனின் ஒளி ஒன்றே காரிருளைப் போக்கிவிடும். ஈர்த்தலும் ஈதலும் ஆன்மாவின் பணியாகும். சத்ய யுகம் வாழ்ந்தாலும் கலியுகம் வாழ்ந்தாலும் ஜீவனுள் மாற்றமில்லை பரமனுள்ளும் மாற்றம் இல்லை. உட்புகும் மென் பொருளே பதிவுகளின் களஞ்சியமாம். துறந்திட்டால் தீக்கமுறும் பயணமும் எளிதாகும். எத்தனை பிறவிகள், எத்தனை பதவிகள், எத்தனை பணிகள், எத்தனை பண்புகள், அத்தனையும் ஏற்றிட்டால் ஆன்மாவின் நிலை என்ன? சத்தியத்தை மறந்துவிடும். சேரும் இடம் மறைந்துவிடும். நித்திமும் நிறைந்திடவே பற்றுகள் பற்றிடவே வாழ்வுகள் தொடர்ந்து விடும், பிறவிகளும் பற்றிடும், துறப்பது ஒன்றே துறவறம் எனில் பற்றுகளைத் துறந்துவிடு. நிலைப்பது ஒன்றே இல்வாழ்வு எனில் பற்றின்றி வாழ்ந்திட பழகிவிடு.

ஒளி ரூபம் ஏற்றிட்டே விண்ணோக்கிப் பயணித்தோம். ஒளியின் ரூபம்தனையே இத்தருணமும் ஏற்கின்றோம். **ஞானத்தின் ஆலயத்தில்** பணிவு கொண்டு நிலைத்திட்டோம். அகத்தீசனின் உறுதுணையாய் ஆற்றல்களை ஈந்திட்டோம். சத்திய வாக்குதனை ஈசனிடம் பெற்றிட்டோம், சன்மார்க்கம் தழைத்துவிட சமரசமும் புரிந்திட்டோம். அணையா விளக்கு என்பது ஆன்மாவினையே குறிக்கின்றது. ஆன்மா என்பதோ ஈசனையே ஈர்க்கின்றது. ஒளியோடு ஒளியாக, ஒன்பது நிலையாக ஈசனின் ஓம்காரம் உணர்த்திடவே ஒன்றெனவே கலப்பு கொண்டோம். ஆலயத்தினை ஆண்டுவிடும் பெண் மகளார் நிலை கண்டோம். உடல் வேறு, உயிர் வேறு, உத்தம நிலைகள் வேறு. ஏற்றிட்ட பணி ஒன்றே எமை ஈர்த்தது இன்று.

**தீட்சைக்கு இணையத்தளத்தில் முன்பதிவு அவசியம் - www.enlightenedbeings.org**


## Gnanalayam - The Wisdom Temple

(a unit of Light Bridge Foundation)

எண் 27, ஜீவா வீதி, முத்திரையர் பாளையம், புதுச்சேரி – 605 009.

Phone: (+91) 89405 96665. | email: wisdomtemple.pondy@gmail.com

  

விண்ணோக்கி ஒளியாக உருமாறி நிலைத்துவிட்ட ஆன்மாக்கள் மண்ணோக்கிப் பயணித்தால் மாற்றமுறும் யுகம் ஒன்று. ஈசனே ஒளிவடிவாய் புவிநோக்கிப் பயணித்தால் நிறைவுறும் சதுர்யுகம் ஒன்று. சூரியன் உதித்துவிட்டால் நாள் ஒன்று மலர்ந்துவிடும் மானுடர்களுக்கு. புவிக்கோள் இயங்காது நிலைத்துவிட்டால் நாள் ஒன்று நிறைவு பெறும் ஈசனுக்கு. விண்ணிலே வாழ்கின்ற ஒளி ரூப ஆன்மாக்கள் மண்ணின் நிலையும் அறிந்திடும். ஈசனின் நிலையும் அறிந்திடும். ஆற்றிடும் செயல்களே மாற்றமுறும்.

**ஆலயத்தினிலே** உட்ஜோதியாய்க் கலப்புற்று யாம் ஆற்றிடும் பணி குறித்தும் குருவாய் செயல்புரிந்து தீட்சைகளையே நல்கி விழிகளின் தீர்க்கம் உரைக்கும் ஆன்மாவின் நிலை குறித்தும் மானுடராய் இணைந்திருக்கும் மாக்களின் நிலை குறித்தும் சொற்கள் சில உதிர்த்திடுவோம். குருவின் அழைப்பினை ஏற்று ஆன்ம ஒளிரூபம் காட்டிடுவோம். சொற்கள் சிலவே உதிர்திடுவோம் எனினும் ஜீவனுள் ஜீவனாய் மலர்ந்திடுவோம். சித்தனுள் சித்தனாம் ஆறுமுகச் சித்தன் தம் நிலைதனையே உணர்த்தி எமை ஆண்ட காரணத்தால் சத்திய நிலை உணர்ந்து உயிரினை உருக்கி ஒளி ரூபம் கண்டிட்டோம். எஞ்சிடும் கலியினில் எந்நிலையும் உணராது மிஞ்சிடும் மாந்தர் கூட்டம் புல்லினமாய் உருமாறும். கட்டளைகள் சிலவற்றை கட்டுறவே உரைத்திடுவோம். கருத்தினிலே ஏற்றிட்டால் நலம் உண்டு உணருங்கள்.

https://www.facebook.com/gnanalayam/

வாழுகின்ற காலத்தை வினுறுத்தல் ஆகாது
வந்த வழி போன வழி என்றென்றும் மறவாதே
உள் உறையும் ஜீவனையே உயர்நிலையாய் போற்றிவிடு
வெளித்தோன்றும் கசடுகளை வெளியேற்றி வாழ்ந்துவிடு
கழிவுகளும் அழிவுகளாய் உருமாறும் உணர்ந்துவிடு
கற்றவையோ காலத்தை வென்றுவிடும். அறிந்துவிடு
எச்சங்கள் துச்சங்கள் இறுமாப்பு நீக்கிவிடு
ஆணவமே பெரும்கசடு, மனமுவந்து போக்கிவிடு
கலியுகத்தின் எல்லையிலே உணர்வு நிலை குன்றிவிடும்
காரணத்தை அறிந்து விட்டால் ஆன்மாவும் ஒளி வீசும்
அனுக்களின் கசடுகளே மையத்தை மறைத்துவிடும்
வீடுபேறு மார்க்கமும் விட்டத்தில் நிலைத்துவிடும்
தோன்றிடும் இடம் ஒன்றே ஆதியாகும்
ஒன்றிடும் இடம் ஒன்றே அந்தமாகும்
ஆதியும் அந்தமும் ஈசனாகும்

ஆன்மாவின் நிலை வீடும் ஈசனாகும்
ஈசனே எவர் என்று அறிந்திடாது வாழ்ந்திட்டால்
ஈரேழு உலகமுமே திரைகளாய் உருகொள்ளும்
திரைகளை நீக்கினால் உட்பயணம் எளிதாகும்
திங்களும் சூரியனும் இருவிழியாய் ஒளிகாட்டும்
காத்திருக்கும் ஈன்றவர்களை ஒளிகொண்டே கண்டுநின்றால்
உண்மைகளும் சத்தியமும் ஒளி ஒலியாய் தோன்றிவிடும்
தீ ஒன்றே ஒளிக்காட்டும் தீபம் ஒன்றே நிலை உணர்த்தும்
குரு ஒன்றே தீயினை அளித்து தீபத்தினைப்
பொருத்தி ஈசனின் இருப்பிடம் உணர்த்திடுவார்
பிறந்து பிறந்து மடியாதே
இறந்து மீண்டும் பிறவாதே
இன்னல் பல ஏற்காதே
மண்ணில் என்றும் நிலைக்காதே

Gnanalayam - The Wisdom Temple, Pondicherry

யாம் இக்கட்டளைகளை ஈந்து நின்றாலும் நிகழ்வது யாவும் நிர்ணயத்தின் மூலமே என்றுணர்க. ஈசனும் ஒளிர்ந்திடுவார் ஆன்மாக்களும் மகிழ்ந்திருக்கும். ஆன்ம விடுதலையும் எளிதாகும் கலச வித்துக்களும் சத்தாகும் ஏற்றிட்ட பணிகளும் தீக்கமாகும். பாங்குடனே பரவசம் எய்தி பணிந்தோரை பரமனடி சேர்த்திட அருளாசி நல்கிடுவோம். ஈசனே எமது தந்தை ஆதிசக்தியே எமது தாய். அருட்பெரும் சுடராம் ஆறுமுகனே எமது ஆசான். அருளும் ஒளியும் எமது ரூபம். மெய்ஞான மார்க்கமே எமது பயணம். வாழ்கின்ற மானுடமே எமது குறிக்கோள். காருண்யம் உணர்த்துவதே எமது பணி. **ஞானாலயத்தைக் காப்பதுவே எமது நிலை. ஆறுமுக ஆசானின் பணி ஏற்று குருவெனும் ஆன்மாவிற்கு துணை நின்று தீட்சைகளை அருளிடவே ஆற்றல்தனை நல்கிடுவோம். ஈச உலகம் சென்றடைய ஆன்மாக்களுக்கு ஒளிகூட்டியே உதவிடுவோம். பரஞ்ஜோதியே பாரினை வெல்லும்.**

---


## Gnanalayam - The Wisdom Temple

**(a unit of Light Bridge Foundation)**

**எண் 27, ஜீவா வீதி, முத்திரையர் பாளையம், புதுச்சேரி – 605 009.**

Phone: (+91) 89405 96665. | email: wisdomtemple.pondy@gmail.com | www.enlightenedbeings.org